

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி தேர்தல் பிரச்சாரத்தினை ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சருமான சு.முத்துசாமி ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி இந்தியா கூட்டணி கட்சிகளின் கழக வேட்பாளர் வி.சி.சந்திரகுமாரை ஆதரித்து பெரியார் நகர் பகுதியில் கள்ளுக்கடை மேடு, ஓடைப்பள்ளம் ,ஆகிய இடங்களில் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை விளக்கி வாக்கு சேகரித்தார். உடன் கழக துணைப் பொதுச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான அந்தியூர் ப.செல்வராஜ், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், மாநில நிர்வாகிகள் எம்.கந்தசாமி, எஸ்எல்டி.ப.சச்சிதானந்தம், குறிஞ்சி என்.சிவக்குமார், மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம், மாவட்ட கழக துணை செயலாளர் ஆ.செந்தில்குமார், பெரியார் நகர் பகுதி கழக செயலாளர் அக்னி டி.சந்திரசேகர், கே.சந்திரசேகர், அயூப் , மாமன்ற உறுப்பினர் பிரவீனா உள்ளிட்ட கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் வாக்கு சேகரித்தனர்.



சென்னை, ஜாபர்கான்பேட்டை, ராகவன் காலனி, மாநகராட்சி விளையாட்டுத் திடலில், நேற்று முன்தினம் (16.01.2025) நடைபெற்ற ”சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழாவில் கடலூர் ஸ்ரீ ரேணுகாம்பாள் குழு வின்,இறை நடனம் கலை நிகழ்ச்சி கலைஞர்கள் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்களிடம் வாழ்த்துப் பெற்றனர்.



சென்னை, அரசு இசைக்கல்லூரி வளாகம், ராஜா அண்ணாமலைபுரத்தில் நேற்று முன்தினம் (16.01.2025) நடைபெற்ற ”சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழாவில் ஈரோடு முகில் கலைக் குழுவினரின் கரகாட்டம் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியினை பொது மக்கள் ஆர்வமுடன் கண்டுகளித்தனர்.



சென்னை, பெரம்பூர் முரசொலி மாறன் பூங்காவில் நேற்று முன்தினம் (16.01.2025) நடைபெற்ற ”சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழாவில் பெரம்பலூர் கலை அருவிக் கலைக்கூடம் குழுவினரின் மயில் காவடியாட்டம் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியினை பொது மக்கள் ஆர்வமுடன் கண்டுகளித்தனர்.

### சிறுமதியாளர்கள் சுருக்க நினைத்தாலும்

# பேரறிவால் பொலிகிறார் அய்யன் வள்ளுவர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு!

சென்னை, ஜன. 18 -

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒடிசாவில் பூரி கடற்கரையில் வரையப்பட்ட அய்யன் திருவள்ளுவரின் பேரறிவுச் சிலையின் மணற் சிற்பத்தை மேற்கோள் காட்டி வெளியிட்ட சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**சிறுமதியாளர்கள் சுருக்க நினைத்தாலும் பேரறிவால் பொலிகிறார் அய்யன் வள்ளுவர்.**

**“மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்**
**கீழல்லார் கீழல் லவர்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.




### திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில் - அய்யன்

# திருவள்ளுவர் சிலைக்கு அமைச்சர் எ.வ.வேலு மாலை அணிவித்தார்!

## கழக முன்னோடிகள், பொதுமக்கள் பங்கேற்பு!

*திருவளளுவர்,ஜன.18-*

திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு, திருவண்ணாமலை மாவட்ட திமுக சார்பில், அய்யன் திருவள்ளுவர் சிலைக்கு, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு மாலை அணிவித்தார். கழக முன்னோடிகளும் பொது மக்களும் கலந்து கொண்டனர்.

15.1.2025 புதன்கிழமை காலை 9.00 மணிக்கு, திருவண்ணாமலை, திருக்கோயி லூர் ரோடு, வேட்டவலம் சாலை சந்திப்பில் உள்ள திருவள்ளுவர் சிலை அருகே, திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில் திருவள்ளுவர் தினம் கொண்டாடப்பட்டது.

விழாவில் கலந்து கொண்டு, பொதுப்பணித் துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினருமான எ.வ.வேலு அவர்கள் திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்து வணங்கினார்.

விழாவில் போற்றுவோம், போற்றுவோம், வள்ளுவரை போற்றுவோம்!

நடப்போம், நடப்போம் குறள் வழி நடப்போம் என உறுதிமொழி ஏற்றுக் கொள்ளப்பட்டது.

விழாவில் கழக மருத்துவர் அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், நகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன், மாவட்ட துணை செயலாளர் பிரியா விஜயரங்கன்,

மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, ஏ.ஏ. ஆறுமுகம், கு. கணேஷ், கற்பகம்சரவணன், துணை மேயர் சு. ராஜாங்கம், நகர நிர்வாகிகள் ந.சீனுவாசன், குட்டி க.புகழேந்தி, கோல்டு எஸ். பிரபு, ஹக்கிம் சேட், துரை.வெங்கட், மாவட்ட துணை அமைப்பாளர்கள் எஸ்.சமயராஜ், ராயல் தியாகு, ஆ. தே.முருகையன், அய்யம்பாளையம் திருநாவுக்கரசு, அத்தியந்தல் ராமகிருஷ்ணன், தொ.மு.ச., பரசுராமன், வட்ட செய லாளர்கள் பி. ஆர்.நாகராஜ், க.பிரகாஷ், சி.கே.சசிகுமார், மு.ஆனந்தன், கே.வெங்கட், குணாளன், ரகுபதி, அ.சபரி, ஆர். சாதிக்பாஷா, பா.தீபன், இரயில்வே சீனுவாசன் மற்றும் பொதுமக்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



திருவண்ணாமலையில் திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு, அவரது சிலைக்கு, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, மாலை அணிவித்து வணங்கினார். உடன் கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், சி.என்.அண்ணாதுரை.எம்.பி., இரா.ஸ்ரீதரன், எஸ்.பன்னீர்செல்வம், ப.கார்த்திவேல்மாறன், பிரியா விஜயரங்கன், சு.ராஜாங்கம், குட்டி புகழேந்தி, ஏ.ஏ.ஆறுமுகம். க.பிரகாஷ் உட்பட பலர் உள்ளனர்.



பொங்கல் திருநாளை முன்னிட்டு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழா திருமயம் ஒன்றிய தி.மு.க. சார்பில் திருமயம் பேரூர் பகுதிகளில் கழகக் கொடியேற்றும் நிகழ்ச்சி மற்றும் பெரியார் நினைவு சமத்துவபுரம் ஒன்றிய தி.மு.க. அலுவலகம் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெற்ற சமத்துவ பொங்கல் விழாவில் தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி கழக கொடியினை ஏற்றி வைத்து மற்றும் சமத்துவப் பொங்கலிட்டு சிறப்பித்தார்கள். உடன் ஒன்றிய கழக செயலாளர்கள் ஆறு. சிதம்பரம், இரா. கணேசன், அணி அமைப்பாளர்கள் இரா.மேகநாதன், தேவி, கே.ஆர்.ராமசாமி, சுப.துரைராஜா, மற்றும் பலர் கலந்து கொண்டனர்.




அரியலூர் மாவட்டம், குன்னம் சட்டமன்ற தொகுதி, இரும்புலிக்குறிச்சி கிராமத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்ப) லிட், திருச்சி மண்டலத்தின் சார்பில் இரும்புலிக்குறிச்சி மயிலாடுதுறை பேருந்து சேவையினை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா அவர்கள் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.



சேலம் கிழக்கு மாவட்டம் பெத்தநாயக்கன்பாளையம் மத்திய ஒன்றியம் பெரிய கிருஷ்ணாபுரம் ஊராட்சியில் தை திருநாளை முன்னிட்டு பொதுக்குழு உறுப்பினர் முத்துலிங்கம், சித்ரா கந்தசாமி ஆகியோர் ஏற்பாட்டில் கழக இருவண்ண கொடியேற்றி இனிப்புகள் வழங்கி நலத்திட்ட உதவிகளை கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்டப் பொருளாளர் ஆர். வி.ஸ்ரீராம் மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், ஒன்றிய செயலாளர்கள் மூர்த்தி, தங்க மருதமுத்து, வக்கீல் மனோகரன், பேரூர் செயலாளர்கள் வெங்கடேசன், பாபு, ஒன்றிய நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.